செ.வெ.எண் : 02/ஜுலை நாள்:02.07.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## வேளாண்மை பொறியியல் துறை சார்பாக சூரிய சக்தியால் இயங்கும் பம்ப் செட்டுகள் 70 சதவிகித மானியம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் திறந்த வெளி கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கு விவசாயிகளுக்கு 70% அரசு மானியம் வழங்கப்பட உள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (PM-KUSUM) வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாய பயன்பாட்டிற்கான திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் சூரிய சக்தியில் இயங்கும் சோலார் பம்ப்செட்களை 70 சதவீத மானியத்தில் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நடப்பு 2020-21-ம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 542 சோலார் பம்ப்செட்கள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு 5 ஹெச்பி முதல் 10 ஹெச்பி வரை சோலார் பம்ப் செட்டுகள் அமைத்துத் தரப்படும். 5 ஹெச்பி சோலார் பம்ப் செட்டு அமைக்க அதிகபட்சமாக தொகை ரூ.2,42,303/-ம், 7.5 ஹெச்பி சோலார் பம்ப் செட்டு அமைக்க அதிகபட்சமாக தொகை ரூ.3,67,525/-ம் மற்றும் 10 ஹெச்பி சோலார் பம்ப் செட்டு அமைக்க அதிகபட்சமாக தொகை ரூ.4,39,629/-ம் செலவாகும். இதில் 70 சதவீத தொகை அரசு மானியமாக வழங்கப்படும்.

ஏற்கனவே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அவர்களுடைய மூதுரிமையை துறக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்களுக்குரிய இலவச மின் இணைப்பு முறை வரும்பொழுது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான சம்மத கடிதத்தினை சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் வழங்க வேண்டும். இதுவரை இலவச மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விண்ணப்பிக்காத விவசாயிகள் புதிதாக பதிய வேண்டிய அவசியமில்லை. சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் போது நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் இராமநாதபுரம், திருப்புல்லானி, மண்டபம், ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் திருவாடானை வட்டார விவசாயிகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கருவூலக கட்டிட முதல் தளத்தில் அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர்(வே.பொ), இராமநாதபுரம் அலுவலகத்திலும் (கைபேசி எண்: 9443323374), பரமக்குடி, நயினார்கோயில், முதுகுளத்தூர், போகலூர், கமுதி மற்றும் கடலாடி வட்டார ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் பரமக்குடி, கொல்லம்பட்டறைத் தெருவிலுள்ள உதவி செயற்பொறியாளர்(வே.பொ), பரமக்குடி அலுவலகத்திலும் (கைபேசி எண்: 8525033365) தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அளித்து பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ. வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**